Live more, Bank less

# டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(சிங்கப்பூரில் ஒருங்கிணைக்கப்பட்டது. பதிவு எண்: 199901152M)

# மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

## சுருக்கமான நிதிநிலை விவரம்

31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (குழுமம்) மற்றும் டிபிஎஸ் பேங்க் லிமிடெட் (வங்கி) ஆகியவற்றின் முழு நிதிநிலை அறிக்கைகளின் சுருக்கம் மட்டும் பின்வரும் நிதிநிலைத் தகவல்களில் இடம்பெறும். குழுமம் மற்றும் வங்கியின் நிதிமுடிவுகள் மற்றும் நிதிநிலைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இதில் போதிய விவரங்கள் அடங்கியிருக்கவில்லை. கூடுதல் தகவலுக்கு, தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் முழுமையான தொகுப்பையும், தணிக்கையாளரின் அறிக்கைகளையும் இயக்குநர்களின் அறிக்கைகளையும் தயவுசெய்து பார்க்கவும். இவை – www.dbs.com/investors.என்ற டிபிஎஸ் இணையத்தளத்திலும் கிடைக்கும்.

# சுருக்கமான நிதிநிலை விவரம் உள்ளடக்கங்களின் அட்டவணை

## டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

**சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை** 3

### நிதிநிலை அறிக்கைகள்

தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை 11
தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை 12
தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலை அறிக்கை 13
தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை 14
தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை 15

### இதர விவரங்கள்

1. மூலதன வளம் 16
2. லாப ஈவுகள் 16
3. முன்மொழியப்பட்ட ஊக்கத் தொகை வெளியீடு 16

## டிபிஎஸ் பேங்க் லிமிடெட்.

### நிதிநிலை அறிக்கைகள்

தணிக்கை செய்யப்பட்ட வருவாய் அறிக்கை 17
தணிக்கை செய்யப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை 18
தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கை 19

### இதர விவரங்கள்

1. டிபிஎஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் மூலதன வளம் 20

# டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் உறுப்பினர்களுக்கான சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

## நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கை பற்றிய அறிக்கை

### எங்கள் கருத்து

எங்கள் கருத்துப்படி, இணைக்கப்பட்டுள்ள டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (நிறுவனம்) மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளும் நிறுவனத்தின் இருப்புநிலை அறிக்கையும் சிங்கப்பூர் நிறுவனங்கள் சட்டம் 1967 (சட்டம்) படியும் சிங்கப்பூர் நிதிநிலைத் தாக்கல் தரங்கள் (அனைத்துலகம்) ["SFRS(I)s"] விதியின்படியும் முறையாகத் தயாரிக்கப்பட்டு, 31 டிசம்பர் 2023-இல் நிலவிய குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலையையும் நிறுவனத்தின் நிதிநிலையையும், அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் செயல்திறன், ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்றம், ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்கம் ஆகியவற்றையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன.

**நாங்கள் தணிக்கை செய்தவை**

நிறுவனம் மற்றும் குழுமத்தின் நிதிநிலை அறிக்கைகளில் இருப்பவை:

- 31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை;
- 31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை;
- 31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமம் மற்றும் நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலை அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை;
- அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான குழுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை; மற்றும்
- குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கை விவரங்கள் உட்பட நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்.

### கருத்துக்கான அடிப்படை

நாங்கள் சிங்கப்பூர் தணிக்கைத் தரங்களுக்கு (SSAs) ஏற்ப தணிக்கை செய்தோம். அந்தத் தரங்களின் அடிப்படையிலான எங்களது பொறுப்புகள், எங்களது அறிக்கையின் நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள் என்ற பிரிவில் மேலும் அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

**சுதந்திரம்**

நாங்கள் கணக்கியல் மற்றும் நிறுவன ஒழுங்குமுறை ஆணையத்தின் (ACRA) நிபுணத்துவ நடத்தைக் குறியீடு மற்றும் பொதுக் கணக்காய்வாளர்கள் மற்றும் கணக்கியல் நிறுவனங்களுக்கான நெறிமுறைகள் (ACRA குறியீடு) ஆகியவற்றின்படியும் சிங்கப்பூரில் நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்கு அவசியமான நெறிமுறை நிபந்தனைகளின்படியும் குழுமத்துடன் சம்பந்தமில்லாத சுதந்திரமான அமைப்பாகச் செயல்பட்டு, இந்த நிபந்தனைகளுக்கும் ACRA குறியீட்டுக்கும் ஏற்ப எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றியிருக்கிறோம்.

## எங்கள் தணிக்கை அணுகுமுறை

**மேலோட்டம்**

**குறிப்பிடத்தக்க தன்மை**

- குழுமத்தின் ஒட்டுமொத்த குறிப்பிடத்தக்க தன்மையை குழுமத்தின் வரிக்கு முந்தைய லாபத்தில் 5%-இன் அடிப்படையில் நிர்ணயித்தோம்.

**குழும வரையறை**

- டிபிஎஸ் பேங்க் லிமிடெட் மற்றும் டிபிஎஸ் குரூப் (ஹாங்காங்) லிமிடெட் ("முக்கியக் கூறுகள்") ஆகியவற்றின் சிங்கப்பூர் நடவடிக்கைகள் மீது முழு அளவிலான தணிக்கை நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஹாங்காங், தைபே மற்றும் லண்டன் டிபிஎஸ் பேங்க் லிமிடெடின் கிளைகளையும், அதன் துணை நிறுவனங்களான டிபிஎஸ் பேங்க் (சைனா) லிமிடெட், பிடி பேங்க் டிபிஎஸ் இந்தோனேசியா, டிபிஎஸ் பேங்க் (தைவான்) லிமிடெட் மற்றும் டிபிஎஸ் பேங்க் இந்தியா லிமிடெட் ஆகியவற்றைக் கூறு நிறுவனங்களாக ("மற்ற கூறுகள்") அடையாளம் கண்டோம். இங்குதான் தொகுதியோடு ஒப்பிட சில கணக்கு இருப்புகள் அளவில் குறிப்பிடத்தக்கவையாக கருதப்பட்டன. ஆகவே, இந்த உட்கூறுகளின் குறிப்பிடத்தக்க கணக்கு இருப்புகள் தணிக்கைக்கும் குறிப்பிட்ட வழிமுறைகளுக்கும் உட்படுத்தப்பட்டன, போதுமான மற்றும் தகுந்த தணிக்கை சான்று பெறுவதற்காக அவ்வாறு செய்யப்பட்டது.

**முக்கியத் தணிக்கை விவகாரங்கள்**

- வாடிகையாளர்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள்
- கடன் இழப்புகளுக்கான பொதுவான ஒதுக்குகள் (1 மற்றும் 2 ஆம் கட்ட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு)
- நன்மதிப்பு
- நியாயமான மதிப்பில் வசமிருக்கும் நிதிக்கருவிகளின் மதிப்பீடு

எங்கள் தணிக்கை வடிவமைப்பின் ஒரு பகுதியாக, குறிப்பிடத்தக்கதன்மையை நிர்ணயித்து, இணைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க விவரப்பிழைகளின் இடர்கோள்களை மதிப்பிட்டோம். குறிப்பாக, நிர்வாகம் செய்த அகச்சார்நிலை தீர்ப்புகளைப் பரிசீலித்தோம்; எடுத்துக்காட்டாக, முக்கியமான கணக்கீட்டு மதிப்பிடலைப் பொறுத்தவரை, ஊகங்கள் செய்வது மற்றும் நிச்சயமற்ற வருங்கால நிகழ்வுகளைக் கருத்தில் கொள்வது. எங்களது எல்லாத் தணிக்கைகளிலும் செய்வதைப் போலவே, உள் கட்டுப்பாடுகள் மீதான நிர்வாகத்தின் ஆதிக்க இடர்பாட்டையும் நாங்கள் ஆய்ந்தோம். மோசடியால் குறிப்பிடத்தக்க விவரப்பிழை ஏற்படக்கூடிய இடரைப் பிரதிநிதிக்கும் பாரபட்சத்திற்கு ஆதாரம் இருக்கிறதா என்ற பரிசீலனையும் இதில் அடங்கும்.

**குறிப்பிடத்தக்க தன்மை**

எங்கள் தணிக்கையின் வரையறை, எங்களது குறிப்பிடத்தக்க தன்மை பயன்பாட்டால் நிர்ணயிக்கப்பட்டது. ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் விவரப் பிழைகள் இல்லை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டைப் பெறும் வகையில் தணிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. விவரப் பிழைகள், மோசடியால் அல்லது பிழையால் நேரலாம். அவை தனிப்பட்ட முறையில் அல்லது மொத்தமாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் பயனாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடிய நிலையில் அவை குறிப்பிடத்தக்க தன்மை கொண்டவையாகக் கருதப்படும்.

எங்கள் தொழில்முறைத் தீர்ப்புகளின் அடிப்படையில், ஒட்டுமொத்தக் குழுமத்தின் ஒட்டுமொத்த நிதி அறிக்கைகளின் குறிப்பிடத்தக்க தன்மை உட்பட, குறிப்பிடத்தக்க தன்மைக்கான குறிப்பிட்ட சில அளவீடுகளைப் பின்வரும் அட்டவணையில் உள்ளபடி நாங்கள் நிர்ணயித்தோம். இவையும், மற்றத் தரப் பரிசீலனைகளையும் சேர்ந்து, எங்கள் தணிக்கையின் வரையறை, தணிக்கை நடைமுறைகளின் இயல்பு, காலம், அளவு ஆகியவற்றை நிர்ணயிக்கவும், விவரப் பிழைகளின் விளைவைத் தனிப்பட்ட முறையில் ஒட்டுமொத்த நிதி அறிக்கையின் அடிப்படையிலும் மதிப்பிடவும் எங்களுக்கு உதவின.

| குழுமத்தின் ஒட்டுமொத்தக் குறிப்பிடத்தக்கதன்மையை நாங்கள் எவ்வாறு நிர்ணயித்தோம் | குழுமத்தின் வரிக்கு முந்தைய லாபத்தில் 5% |
|---|---|
| பயன்படுத்திய அளவீட்டுக்குறிகளுக்கான அடிப்படைக் காரணங்கள் | • எங்கள் கண்ணோட்டத்தின்படி, குழுமத்தின் செயல்பாட்டை அளவிட ஆகப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் அளவீட்டுக்குறியாகக் கருதிய "வரிக்கு முந்தைய லாபத்தை" நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.<br>• எங்கள் நிபுணத்துவ மதிப்பீட்டின் அடிப்படையில் 5%-ஐத் தேர்ந்தெடுத்தோம். பொதுவாக ஏற்கப்படும் லாபம் சார்ந்த அளவீடுகளுக்கு இது உட்பட்டிருப்பதையும் கவனத்தில் கொண்டோம். |

எங்கள் தணிக்கையைச் செய்கையில், குழுமத்தின் முக்கியக் கூறுகளுக்கும் இதரக் கூறுகளுக்கும் குறிப்பிடத்தக்கதன்மை நிலைகளை வரையறுத்தோம். இவை குழுமத்தின் ஒட்டுமொத்த குறிப்பிடத்தக்கதன்மையைவிடக் குறைவு.

**தணிக்கை வரையறையை நாங்கள் உருவாக்கிய விதம்**
நாங்கள் குழுமத்தின் அமைப்புமுறை, கணக்கியல் நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், குழுமம் செயல்படும் தொழில்துறை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, நிதிநிலை அறிக்கைகள் குறித்து ஒட்டுமொத்தக் கருத்துத் தெரிவிப்பதற்குப் போதிய பணி மேற்கொள்ளும் வகையில் எங்கள் தணிக்கையின் வரையறையை வகுத்தோம். குழுமத்தின் நிதிநிலை அறிக்கைத் தாக்கல் நடைமுறை அதன் தகவல் தொழில்நுட்ப (IT) இயங்குமுறைகளைச் சார்ந்திருக்கிறது. எங்களது தணிக்கை வரையறையில் நிதிநிலை அறிக்கைத் தாக்கலுக்குத் தேவைப்பட்ட முக்கிய நிதி விவரங்கள் தகவல் தொழில்நுட்ப (IT) இயங்குமுறைகளில் நேர்மையாகப் பரிசீலிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் கட்டுப்பாடுகளின் செயலாற்றலைச் சோதிப்பதும் உள்ளடங்கியது.

ஒட்டுமொத்தக் குழுமத்தின் தணிக்கை அணுகுமுறையை நிலைநாட்ட, குழுமம் முழுவதிலும் எங்களால், அல்லது இந்த வட்டாரங்கள் ஒவ்வொன்றின் உள்ளூர்ச் சட்டமும் ஒழுங்குவிதிகளும் பழக்கப்பட்ட எங்கள் கட்டளையின்கீழ் செயல்படும் மற்ற PwC கட்டமைப்பு நிறுவனங்களால் ("பிரிவுகளின் தணிக்கையாளர்கள்") மேற்கொள்ளப்பட வேண்டிய தணிக்கை நடைமுறைகளின் அளவை நாங்கள் நிர்ணயித்தோம். பிரிவுகளின் தணிக்கையாளர்கள் மேற்கொண்ட பணிகளில், ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்துக்குப் போதிய பொருத்தமான தணிக்கை ஆதாரம் பெறப்பட்டதாகத் தீர்மானிப்பதற்குத் தணிக்கை நடைமுறைகளில் நாங்கள் எவ்வளவு ஈடுபாடு கொள்ளவேண்டும் என்பதை நாங்கள் நிர்ணயித்தோம்.

**முக்கியத் தணிக்கை விவகாரங்கள்**

முக்கியத் தணிக்கை விவகாரங்கள் என்பது, எங்களது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி, 31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற நிதியாண்டின் நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்துத் தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை.

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **வாடிகையாளர்களின் கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்குகள்**<br><br>31 டிசம்பர் 2023-இல் குழுமத்தின் வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்கு $2,347 மில்லியன். இதில் பெரும்பகுதி கழக வங்கிக்குழுமத்தின் ("IBG") வாடிக்கையாளர்கள் சார்ந்தவை. சிறப்பு ஒதுக்கு என்பது கடன் சேதார வெளிப்பாடுகளுக்கான (அதாவது, SFRS (I)-9-ன் கட்டம் 3-இன் படி) நட்ட ஒதுக்கீட்டைக் குறிக்கிறது. சேதாரமற்ற வெளிப்பாடுகளின் (அதாவது கட்டம் 1 மற்றும் கட்டம் 2) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு "கடன் இழப்புகளுக்கான பொது ஒதுக்குகள்" என முக்கியத் தணிக்கை விவகாரத்தின்கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.<br><br>குறைபாட்டின் நிர்வாக மதிப்பீடு இயல்பாகவே அகநிலை சார்ந்தது என்பதாலும் அத்தகைய குறைபாடு ஏற்பட்ட நேரம் மற்றும் மதிப்பீட்டின் அளவு அடிப்படையில் குறிப்பிடத்தக்க தீர்ப்பு உட்பட்டிருப்பதாலும் நாங்கள் இந்தப் பகுதியில் கவனம் செலுத்தினோம். இதில் உள்ளடங்குவன:<br><br>• சேதார நட்டத்திற்கான ஆதாரங்கள் (கடன் பெறுபவர்களின் எதிர்கால லாபத்தன்மை மற்றும் பிணையப்பொருளின் எதிர்பார்க்கப்படும் கைகூடத்தக்க மதிப்பு உள்ளடங்கும்) இருக்கும்போது, IBG வாடிக்கையாளருக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களின் சிறப்பு ஒதுக்குக் கணக்கீட்டின் கீழமைந்த முதன்மை ஊகங்கள்; மற்றும்<br>• எம்ஏஎஸ் நோட்டீஸ் 612 (“MAS 612”) அடிப்படையில் கடன்கள் மற்றும் முன்பணத்தின் வகைப்பாடு.<br><br>(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 3 மற்றும் 18-ஐப் பார்க்கவும்.) | கடன்கள் மற்றும் முன்பணத்திற்கான குறிப்பிட்ட சலுகைகளைவிட அதன் வடிவமைப்பையும் கட்டுப்பாடுகளின் முக்கிய செயல்பாட்டு திறன்களையும் மதிப்பிட்டோம். இந்தக் கட்டுப்பாடுகளில் உள்ளடங்குவன:<br><br>• குழுமக் கடன் இடர்கோள் கவனக்குறைவு;<br>• உரிய காலத்தில் நிர்வாகத்தின் கடன் இடர்கோளின் மறுஆய்வு;<br>• கண்காணிப்புப் பட்டியல் அடையாளம் காணப்படுதல் மற்றும் கண்காணிப்பு;<br>• சேதார நிகழ்வுகள் உரிய காலத்தில் அடையாளம் காணப்படுதல்;<br>• எம்ஏஎஸ் 612 அடிப்படையில் கடன்கள் மற்றும் முன்பணத்தின் வகைப்பாடு; மற்றும்<br>• பிணையக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.<br><br>எங்கள் தணிக்கையின் நோக்கத்திற்காக இந்தக் கட்டுப்பாடுகளை நாங்கள் சார்ந்திருக்க முடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>கடன்களும் முன்பணமும் MAS 612 அடிப்படையில் பகுக்கப்பட்டதா என்பதையும், சேதார இழப்புக்கான ஆதாரம் இருந்த நிலையில், அது உரிய காலத்தில் அடையாளம் காணப்பட்டதா என்பதையும் மதிப்பிட IBG வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணங்களின் உதாரண மாதிரியை நாங்கள் பரிசீலித்தோம். பொருத்தமான சமயத்தில், பொறுமை எவ்வாறு கருதப்பட்டது என்பதும் இதில் அடங்கும்.<br><br>கடன்கள் மற்றும் முன்பணங்களின் உதாரண மாதிரியில், சேதாரம் அடையாளம் காணப்பட்டபோது, எங்கள் பணியில் உள்ளடங்கியவை:<br><br>• கடன் பெற்றவர் தொடர்பான அண்மை நிலவரம் கருத்தில் கொள்ளப்பட்டது.<br>• நிர்வாகம் தயாரித்த வருங்கால ரொக்கப் புழக்க முன்னுரைப்புகள் பரிசோதிக்கப்பட்டன. தொகை மற்றும் மீட்புக்காலக்கட்டம் ஆகியவற்றின் தொடர்பிலான முக்கிய ஊகங்கள் இதில் உள்ளடங்கின.<br>• இணை மதிப்பீட்டையும் திரும்ப பணம் செலுத்தும் மற்ற மூலங்களையும் ஒப்பிட்டு, வெளிப்புற அத்தாட்சி இருக்கும் பட்சத்தில் அதன் அடிப்படையில் குறைபாட்டின் கணக்கீடு மற்றும் சுயேச்சையான மதிப்பீட்டு அறிக்கைகளைச் சோதிப்பது;<br>• நிர்வாகத்தின் ஊகங்களை எதிராய்வு செய்தோம்; மற்றும்<br>• கணக்கீட்டைச் சோதனை செய்தோம்.<br><br>குறைபாடு உள்ளதாக நிர்வாகத்தால் அடையாளம் காணப்படாத ஐபிஜி வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முன்பணத்தின் மாதிரிக்காக, சம்பந்தப்பட்ட கடன் வாங்கியவரின் வெளிப்புற அத்தாட்சி கிடைத்தபோது அதை உபயோகித்து அவற்றின் வகைப்பாட்டில் நிர்வாகத்தின் ஊகங்களை கணக்கிட்டோம்.<br><br>மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில், கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான சிறப்பு ஒதுக்கீடு பொருத்தமானதாக இருப்பதாக நாங்கள் மதிப்பிட்டோம். |

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **கடன் இழப்புகளுக்கான பொதுவான ஒதுக்குகள் (1 மற்றும் 2 ஆம் கட்ட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு)**<br><br>SFRS(I) 9 நிதி கருவிகளுக்கு ("SFRS(I) 9") எதிர்கால பொருளாதார நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வருங்கால தகவலை கணக்கில் எடுத்துக் கொள்ளும் ஒரு ஈசிஎல் குறைபாட்டு மாதிரி அவசியம். சாத்தியமுள்ள எதிர்கால நிதியியல் நிகழ்வுகளைப் பிரதிபலிக்க, முன்னோக்குள்ள தகவல்களைக் கருத்தில் கொள்கிறது.<br><br>நாங்கள் சேதாரமற்ற வெளிப்பாடுகளுக்குக் குழுமம் அளவிட்ட பொது ஒதுக்குகளில் கவனம் செலுத்தினோம் ($3,896 மில்லியன்). இதில் "நிலை 1" வெளிப்பாடுகளும் (கடன் இடர்கோளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லாதது), "நிலை 2" வெளிப்பாடுகளும் (கடன் இடர்கோளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது) அடங்கும். குழுமம் அமலாக்கிய எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக் கட்டமைப்பில் பின்வருபவை தொடர்பான குறிப்பிடத்தக்க மதிப்பாய்வுகளும் ஊகங்களும் உள்ளடங்குகின்றன:<br>• குழுமத்தின் பாஸல் கடன் மாதிரியமைப்புகள் மற்றும் அளவு வரையறைகளில் சரிகட்டல்கள்;<br>• முன்னோக்குள்ள, பரந்த பொருளியல் தகவல்களின் பயன்பாடு;<br>• சுழலும் கடன் வசதிகளின் எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலத்திற்கான மதிப்பீடுகள்;<br>• கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் மதிப்பீடு; மற்றும்<br>• ஈசிஎல் மாதிரிகளில் உள்ள குறைபாடுகளுக்கு விளக்கமளிக்கும் மாதிரிக்கு பின்னான சரிசெய்தல்கள்.<br><br>(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 3 மற்றும் 11-ஐப் பார்க்கவும்.) | நாங்கள் 31 டிசம்பர் 2023-இல் நிலவிய சில்லறை மற்றும் சில்லறை அல்லாத தொழில் பட்டியல்களுக்கான 1 மற்றும் 2ஆம் கட்ட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு தொடர்பிலான நிர்வாகத்தின் ஊகங்களையும் கணிப்புகளையும் கூர்ந்து ஆராய்ந்தோம். இந்த வருடம் வழிமுறைகளில் செய்யப்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவதும் ஆபத்து கண்ணோட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு விளக்கமளிப்பதும் இதில் அடங்கியுள்ளன.<br><br>நாங்கள் பின்வருபவற்றில் கவனம் செலுத்தி, முக்கியக் கட்டுப்பாடுகளின் செயல் விளைவுத்தன்மையை மதிப்பிட்டதோடு மற்றும் அதன் வடிவமைப்பையும் கணக்கிட்டோம்:<br>• மாதிரிக்கு பின்னான சரிசெய்தல்கள் உட்பட, குறிப்பிட்ட வருங்கால பெரிய பொருளாதார அனுமானங்களை மறுபார்வை செய்து, அங்கீகரிப்பதில் நிர்வாகக் குழுக்களை ஈடுபடுத்துவது;<br>• எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக் கணக்கீட்டில் சேர்க்கப்பட்ட வெளித்தரப்பு மற்றும் உள்தரப்புத் தரவு உள்ளீடுகளில் முழுமை மற்றும் துல்லியம் மற்றும்<br>• அளவு மற்றும் தரத் தூண்டுதல்களின் அடிப்படையில் நிலை 1 நிலை 2 ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட வெளிப்பாடுகளின் துல்லியம் மற்றும் தக்ககாலத்தன்மை.<br><br>எங்கள் தணிக்கையின் நோக்கத்திற்காக இந்தக் கட்டுப்பாடுகளை நாங்கள் சார்ந்திருக்க முடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>ஒவ்வோர் ஆண்டும் குழுமத்தின் உள் நிபுணர்கள் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புக் கணக்கீட்டு முறைகள் மற்றும் ஊகங்களின் மாதிரியமைப்பை சுயேச்சையாக மதிப்பிட்டனர். எங்கள் வேலையின் பாகமாக அவற்றின் விளைவுகளைச் சோதித்தோம்.<br><br>முறைமைகள் மற்றும் மதிப்பீடுகள் பொருத்தமானவையா என்பதை மதிப்பிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் இலாகாக்களின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை மீளாய்வும் செய்தோம்.<br><br>எங்கள் வேலையின்போது, மாதிரிக்கு பின்னான சரிசெய்தல்களுக்கு அடிப்படையான கணக்கையும் காரணத்தையும் மதிப்பிட்டோம். ஒட்டுமொத்த ஈசிஎல் வெளியீட்டையும் சில வருங்கால பொருளாதார உள்ளீடுகளையும் கூட மதிப்பிட்டோம்.<br><br>மொத்தத்தில் சேதாரமற்ற வெளிப்பாடுகளுக்கு எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பைக் கணிப்பதற்குக் குழுமம் பயன்படுத்திய கணக்கு முறைகளும் ஊகங்களும் பொருத்தமாக இருப்பதாக மதிப்பிட்டோம். |
| **நன்மதிப்பு**<br><br>கையகப்படுத்துதல்கள் காரணமாக 31 டிசம்பர் 2023 வரை, இந்தத் தொகுதியிடம் $6,081 மில்லியன் நன்மதிப்பு இருந்தது.<br><br>எதிர்கால ரொக்கப் புழக்கத்தைக் கணிப்பதிலும் வருடாந்திர நன்மதிப்புச் சேதாரச் சோதனையை மேற்கொள்வதிலும் நிர்வாகம் குறிப்பிடத்தக்க அளவிலான தீர்ப்புகள் செய்வதால் நாங்கள் இதில் கவனம் செலுத்தினோம்.<br><br>தள்ளுபடி செய்யப்படும் ரொக்கப் புழக்கப் பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்ட பின்வரும் முக்கிய ஊகங்கள் இவை தொடர்பானவை:<br>• ரொக்கப் புழக்க முன்னுரைப்புகள்;<br>• தள்ளுபடி விகிதம் மற்றும்<br>• நீண்ட கால வளர்ச்சி விகிதம்.<br><br>(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 3 மற்றும் 27-ஐப் பார்க்கவும்.) | நன்மதிப்பு இருப்புகளுக்காக, நிர்வாகம் அடையாளம் கண்ட குழுமத்தின் ரொக்கம் ஈட்டித்தரும் பிரிவுகளின் பொருத்தத்தையும் சேதாரத்தின் அடையாளக்குறிகள் அடையாளம் காணப்பட்ட நடைமுறையையும் நாங்கள் மதிப்பிட்டோம்.<br><br>கிளையுரிமை பெற்ற டிபிஎஸ் பேங்க் (ஹாங்காங்) லிமிடெட்-ஐப் பொறுத்தவரை (31 டிசம்பர் 2023 நிலவரப்படி அதன் நன் மதிப்பு $4,631 மில்லியன்), நிர்வாகத்தின் ரொக்கப் புழக்க முன்னுரைப்புகளையும் அவை வகுக்கப்பட்ட நடைமுறையையும் நாங்கள் பரிசீலித்தோம். எங்கள் குழுவின் மதிப்பீட்டு நிபுணர்களுடன் சேர்ந்து, தள்ளுபடி விகித மற்றும் வளர்ச்சி விகித ஊகங்களைக் குழுமத்தின் சொந்தக் கடந்தகாலச் செயல்பாட்டுடனும் கிடைக்கப்பெற்ற வெளித்தரப்புத் தொழில்துறை மற்றும் பொருளியல் குறியீடுகளோடும் மதிப்பிட்டோம். இந்த கணிப்புகளில் நியாயமான மாற்றங்கள் ஏதாவது ஏற்பட்டால் ஒரு குறைபாடு உண்டாகுமா என்பதை முடிவு செய்வதற்காக நிர்வாகத்தின் உணர்திறன் பகுப்பாய்வை முக்கிய கணிப்புகளோடு ஒப்பிட்டு சோதித்தோம். அதோடு, எங்கள் சொந்த அழுத்த பகுப்பாய்வையும் செய்தோம்.<br><br>31 டிசம்பர் 2023 வரையான நன்மதிப்பு பாக்கியில் எந்தக் குறைபாடும் இல்லை என்ற நிர்வாகத்தின் மதிப்பீட்டை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். |

| முக்கியத் தணிக்கை விவகாரம் | முக்கியத் தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது |
|---|---|
| **நியாயமான மதிப்பில் வசமிருக்கும் நிதிக்கருவிகளின் மதிப்பீடு**<br><br>குழுமத்தின் வசமிருந்த நியாயமான மதிப்பிலான நிதிக்கருவிகள் என்பன வருவித்த சொத்துகள் மற்றும் பொறுப்புகள், வர்த்தகப் பங்குப் பத்திரங்கள், குறிப்பிட்ட சில கடன் கருவிகள் மற்றும் நியாயமான மதிப்பலான இதரச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகும்.<br><br>குழுமத்தின் நிதிக்கருவிகள் பெரும்பாலும் கூறப்பபட்ட சந்தை விலைகள் (நிலை 1) அல்லது சந்தையில் கவனிக்கப்பட்ட விலைகள் (நிலை 2) ஆகியவற்றைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றன. "நிலை 3" அம்சங்களின் மதிப்பீடு கவனிக்கப்பட இயலாத முக்கிய உள்ளீடுகளைச் சார்ந்துள்ளது.<br><br>நிதிக்கருவிகளின் (நிலை 1, 2 மற்று; 3) ஒட்டுமொத்த மதிப்பீட்டை முக்கியத் தணிக்கை விவகாரமாக நாங்கள் கருதினோம். இது குழுமத்தின் நிதிநிலையில் குறிப்பிடத்தக்க அங்கம் வகிப்பதும், நியாயமான மதிப்பை நிர்ணயிப்பதில் ஈடுப்படுத்தப்படும் பொருள்கள் மற்றும் கணிப்புகளின் இயல்பும் இதற்குக் காரணம்.<br><br>நியாயமான மதிப்பை நிர்ணயிக்கும்போது, கடன் இடர்பாடு, நிதியளிப்புச் செலவுகள், ஏலக்குத்தகைப் பரப்புகள், மற்ற சில சூழ்நிலைகளில், அளவு மற்றும் மாதிரியமைப்பு வரையறைகள் ஆகியவற்றை நிர்ணயிக்க நிர்வாகம் சரிகட்டல்களைச் செய்கிறது. இந்தச் சரிகட்டல்கள் சிலவற்றின் கணக்கு முறைமைகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருந்தாலும்கூட, அது வங்கித் தொழில் துறையுடன் பரந்த அடிப்படையில் ஒத்துள்ளது.<br><br>(நிதி அறிக்கைகளின் குறிப்புகள் 3 மற்றும் 41-ஐப் பார்க்கவும்.) | குழுமத்தின் நிதிக்கருவிகளின் மதிப்பீட்டு முறைகள் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் செயல் விளைவுத்திறனையும் நாங்கள் மதிப்பிட்டோம். பின்வருபவற்றின் மீதான அதிகாரமும் இவற்றில் உட்படும்:<br><br>• புதிய மாதிரியமைப்புகளில் நிர்வாகம் செய்யும் சோதனை, அங்கீகரிப்பு மற்றும் தற்போதைய மாதிரியமைப்புகளின் மறுச்சரிபார்ப்பு;<br>• மதிப்பீட்டு மாதிரிகளில் விலைத்தரவு உள்ளீடுகளின் முழுமைத்தன்மை மற்றும் துல்லியம்;<br>• பிணையச் சர்ச்சைகளின் கண்காணிப்பு; மற்றும்<br>• குழுமச் சந்தை மற்றும் பணமாக்கல் இடர்பாட்டுக் குழு, குழும மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றால் செய்யப்படும் மதிப்பீட்டு நடைமுறைகளின் மீது மேற்கொள்ளும் ஆளுமைச் செயல்பாடுகள் (வழிப்பொருள் மதிப்பீட்டுச் சரிகட்டல்கள் உள்ளிட்ட) மற்றும் கண்காணிப்பு.<br><br>எங்கள் தணிக்கையின் நோக்கத்திற்காக இந்தக் கட்டுப்பாடுகளை நாங்கள் சார்ந்திருக்கமுடியும் என நாங்கள் தீர்மானித்தோம்.<br><br>மேலும், நாங்கள்:<br><br>• எங்களது சொந்த வல்லுநர்களைப் பணியமர்த்தி அவர்களது மாதிரியமைப்புகளையும் உள்ளீட்டு மூலங்களையும் பயன்படுத்தி, குழுமத்தின் நிலை 1 மற்றும் 2 நிதிக்கருவிகளின் மாதிரிக்கூறுக்கான நியாயமான மதிப்பின் சுயேச்சைக் கணிப்பை நிர்ணயித்தோம். இவற்றைக் குழுமத்தின் நியாயமான மதிப்புக் கணக்கீட்டுடன் ஒப்பிட்டு, தனிப்பட்ட குறிப்பிடத்தக்கதன்மை மதிப்பீட்டு வேறுபாடுகளை அல்லது அமைப்புமுறையிலுள்ள பாகுபாட்டை ஆராய்ந்தோம்.<br>• பயன்படுத்தப்பட்ட கணக்கு முறைமைகளின் நியாயமான தன்மையையும், குறிப்பிடத்தக்க கண்டுணர முடியாத மதிப்பீட்டு உள்ளீடுகளைக் கொண்ட நிதிக்கருவி மதிப்பீடுகளின் மாதிரிக்கூறுக்காகச் செய்யப்பட்ட ஊகங்களையும் (நிலை 3 கருவிகள்) பரிசீலித்தோம்.<br>• பொருத்தமற்ற மதிப்பீடுகளின் உத்தேசக் குறியீடுகளை அடையாளம் காண பிணையச் சர்ச்சைகளில் பரிசீலனைகள் மேற்கொண்டோம்;<br>• கிடைக்கப்பெற்ற சந்தைத் தரவுகளையும் தொழில்துறைப் போக்குகளையும் கருத்தில் கொண்டு, நியாயமான மதிப்புச் சரிகட்டல்களின் உள்ளீடுகளைச் சோதித்து, கணக்கு முறைகளை ஆராய்ந்தோம்; மற்றும்<br>• நியாயமான மதிப்பை மதிப்பீடு செய்வதில் ஒப்பீட்டுச்சான்று வட்டி விகிதங்கள் மீதான உலகளாவிய சீர்திருத்தங்களின் தாக்கங்கள் கருதப்படுகின்றன.<br><br>மொத்தத்தில், நியாயமான மதிப்பிலான நிதிக்கருவிகளின் மதிப்பீடு ஏற்புடைய விளைவு வரம்புகளுக்கு உட்பட்டிருந்தது. |

## இதர விவரங்கள்

இதர விவரங்களுக்கு நிர்வாகமே பொறுப்பாகும். இதர விவரங்களில் இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்பாக நாங்கள் பெற்ற இயக்குநர்களின் அறிக்கையும் (ஆனால் நிதி அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கை உள்ளடங்காது) இத்தேதிக்குப் பிறகு எங்களுக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட ஆண்டு அறிக்கையின் இதரப் பகுதிகளும் ("இதரப் பகுதிகள்") உள்ளடங்கும்.

நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்தில் இந்த இதர விவரங்கள் உள்ளடங்கவில்லை. அத்தோடு, இது தொடர்பாக எந்தவித உறுதியான முடிவையும் நாங்கள் வெளியிடவில்லை, வெளியிட மாட்டோம்.

நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதில் மேற்காணும் இதர விவரங்களையும் வாசித்து, அவ்வாறு செய்யும்போது, நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் இதர விவரங்கள் ஒத்திருக்கிறதா அல்லது விவரப்பிழை இருப்பதுபோலத் தெரிகிறதா என்பதைப் பரிசீலிப்பது எங்கள் பொறுப்பு.

இந்தத் தணிக்கையாளர் அறிக்கையின் தேதிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைத்த இதர விவரங்கள் மீதான தணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இதர விவரங்களில் விவரப்பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், அந்த உண்மையை நாங்கள் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் தகவல் தெரிவிப்பதற்கு எதுவுமில்லை.

இதரப் பகுதிகளை நாங்கள் படிக்கையில், அதில் விவரப்பிழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால் ஆளுமைக்குப் பொறுப்பானவர்களிடம் அதுகுறித்து தகவல் தெரிவித்து SSAs-க்கு ஏற்ப தகுந்த நடவடிக்கை எடுக்கச்செய்யவேண்டும்.

## நிதி அறிக்கைகளில் நிர்வாகம் மற்றும் இயக்கநர்களின் பொறுப்புகள்

இந்த நிதிநிலை அறிக்கைகள் சட்டத்திற்கும் SFRS(I)s தரங்களுக்கும் ஏற்றபடி தயாரிக்கப்பட்டு உண்மையான மற்றும் நியாயமான கருத்தை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்படுவது நிர்வாகத்தின் பொறுப்பாகும். அத்தோடு அதிகாரமற்ற உபயோகம் அல்லது விற்பனையில் ஏற்படும் இழப்புகளிலிருந்து சொத்துகள் பாதுகாக்கப்படுவதற்கு நியாயமான உறுதியளிக்கக்கூடிய உள் கணக்கியல் கட்டுப்பாட்டு முறையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் மற்றும் பரிவர்த்தனைகள் முறையான அதிகாரம் பெற்று உண்மையான நியாயமான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கவும் சொத்துக் கணக்கில் கட்டிக்காக்கவும் அவசியமான வகையில் பதிவு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது ஆகியவையும் இதில் அடங்கும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், குழுமத்தால் தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றலை மதிப்பிடுவது, பொருத்தமாயின் இது தொடர்பான விவகாரங்களை வெளியிடுவது, தொடர்ந்து செயல்படத்தக்க நிறுவனத்திற்கான கணக்கியல் அடிப்படையைப் பயன்படுத்துவது ஆகியவை நிர்வாகத்தின் பொறுப்பு. குழுமத்தைக் கலைக்க அல்லது செயல்பாட்டை நிறுத்த எண்ணினால் அல்லது இவ்வாறு செய்வதைத் தவிர வேறு சாத்தியமான மாற்றுவழி இல்லாத சூழ்நிலைகள் ஏற்பட்டால் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

குழுமத்தின் நிதிநிலை அறிக்கைத் தாக்கல் நடைமுறையைக் கண்காணிப்பது இயக்குநர்களின் பொறுப்புகளில் உள்ளடங்கும்.

## நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளர்களின் பொறுப்புகள்

மொத்த நிதி அறிக்கைகளில் மோசடி அல்லது பிழையால் விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதி பெற்று எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. நியாயமான உறுதி என்பது உயர் நிலையிலான உறுதியாக இருந்தாலும் சிங்கப்பூர் தணிக்கைத் தரங்களுக்கு ஏற்ப நடத்தப்படும் தணிக்கை, இருக்கக்கூடிய விவரப் பிழையை எப்போதும் கண்டுபிடித்துவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. மோசடியால் அல்லது பிழையால் ஏற்படும் விவரப்பிழைகள், தனியாகவோ அல்லது மொத்தமாகவோ இந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் பயன்பாட்டாளர்கள் எடுக்கும் பொருளியல் தீர்மானங்களைப் பாதிக்கக்கூடும் வகையில் அமைந்தால் அவை முக்கியமானவையாகக் கருதப்படும்.

சிங்கப்பூர் தணிக்கைத் தரங்களின்படி நடத்தப்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, தணிக்கை முழுவதும் நிபுணத்துவ மதிப்பீட்டைப் பயன்படுத்தி, நிபுணத்துவ ஐயவாதத்தை நிலைநாட்டினோம். அத்தோடு நாங்கள்:

- மோசடி அல்லது பிழையால் நிதி அறிக்கைகளில் விவரப் பிழைகள் நேரக்கூடிய அபாயத்தை அடையாளம் கண்டு மதிப்பிட்டு, இந்த இடர்களுக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை மேற்கொண்டு, எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்குவதற்குப் போதுமான பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். பிழையால் நேரும் விவரப்பிழையைவிட மோசடியால் நேரும் விவரப் பிழையை அடையாளம் காணாதிருக்கக்கூடிய அபாயம் அதிகம். ஏனெனில் மோசடியில் கூட்டுச்சதி, ஏமாற்று, வேண்டுமென்றே செய்யப்பட்ட விடுபாடுகள், பிறழ்கூற்று அல்லது உள் கட்டுப்பாடு மீறல் ஆகியவை இருக்கக்கூடும்.
- சூழ்நிலைக்குப் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க, தணிக்கைக்குத் தேவையான உள் கட்டுப்பாட்டைப் பற்றிய புரிந்துணர்வைப் பெறவேண்டும். குழுமத்தின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றி கருத்து தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.
- பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும் நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயமான தன்மையையும் பரிசீலிக்க வேண்டும்.
- தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும், அத்தோடு பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில் குழுமம் தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்து குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால் நிதி அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும் அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால் எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும் வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.
- வெளிப்பாடுகள் உட்பட, நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த படைப்பு, அமைப்புமுறை, உள்ளடக்கம் ஆகியவற்றையும் நியாயமாகப் படைக்கப்படும் வகையில் அடிப்படை பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் நிதிநிலை அறிக்கைகள் பிரதிபலிக்கிறதா என்பதையும் பரிசீலிக்கவேண்டும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிக்க குழுமத்தின் நிறுவனங்கள் அல்லது தொழில் நடவடிக்கைகளின் நிதி விவரங்கள் குறித்த போதுமான, பொருத்தமான தணிக்கை ஆதாரங்களைப் பெறவேண்டும். குழுமத்தின் தணிக்கை முறைக்கும் மேற்பார்வைக்கும் செயல்பாட்டுக்கும் நாங்கள் பொறுப்பாவோம். எங்கள் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாவோம்.

திட்டமிடப்பட்ட தணிக்கை அளவு, காலம் மற்றும் தணிக்கையின்போது உள் கட்டுப்பாட்டில் நாங்கள் அடையாளம் காணும் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்ட தணிக்கையின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளையும் இதர விவரங்களையும் நாங்கள் இயக்குநர்களிடம் தெரியப்படுத்துவோம்.

சுயேச்சை நடைமுறை தொடர்பான நெறிமுறை நிபந்தனைகளுக்கு நாங்கள் உட்பட்டதாகவும் இயக்குநர்களிடம் அறிக்கை சமர்ப்பிப்போம். அத்தோடு எங்கள் சுதந்திரத்தையும் பொருந்துமாயின் அதைச் சார்ந்த பாதுகாப்புகளையும் பாதிக்கக்கூடும் என நியாயமாகக் கருதப்படும் எல்லா உறவுமுறைகளையும் இதர விவகாரங்களையும் அவர்களிடம் தெரியப்படுத்துவோம்.

இயக்குநர்களிடம் தெரியப்படுத்தும் விவகாரங்களிலிருந்து நடப்பு காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கு மிகவும் முக்கியமான விவரங்களை நிர்ணயித்து முக்கியத் தணிக்கை விவகாரங்களை அடையாளம் காண்போம். இவ்விவகாரம் குறித்து பொது வெளிப்பாட்டை விலக்கும் சட்டம் அல்லது விதிமுறை இருந்தாலொழிய அல்லது அரிய சூழ்நிலைகளில் ஒரு விவகாரத்தை வெளியிடுவதால் பொது நலனைவிட அதிக பாதிப்பு நேரக்கூடும் என்ற நியாயமான எதிர்பார்ப்பால் விவகாரத்தை எங்கள் அறிக்கையில் வெளியிடக்கூடாது என நாங்கள் நிர்ணயித்தாலொழிய எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் இவ்விவகாரங்களை நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

## இதரச் சட்டபூர்வ ஒழுங்குவிதி நிபந்தனைகள் குறித்த அறிக்கை

எங்கள் கருத்துப்படி நாங்கள் தணிக்கையாளர்களாக இருக்கும் நிறுவனமும் சிங்கப்பூரில் ஒருங்கிணைக்கப்பட்ட துணை நிறுவனங்களும் இச்சட்டப்படி தேவையான கணக்கு மற்றும் இதரப் பதிவேடுகளைச் சட்டப்படி முறையாகப் பாதுகாத்து வைத்துள்ளன.

சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கையால் உருவாகும் தணிக்கைக்கு ஈடுபாட்டு பங்காளி Yura Mahindroo.




**பிரைஸ்வாடர்ஹௌஸ்கூப்பர்ஸ் எல்எல்பி**
பொது கணக்காளர்கள் மற்றும் பட்டயக் கணக்காளர்கள்

சிங்கப்பூர், 06 பிப்ரவரி 2024

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட வருவாய் அறிக்கை

31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| $ மில்லியன்களில் | 2023 | 2022 |
|---|---|---|
| வட்டி வருமானம் | **27,862** | 15,927 |
| வட்டிச் செலவினம் | **14,220** | 4,986 |
| **நிகர வட்டி வருமானம்** | **13,642** | 10,941 |
| நிகரக் கட்டணமும் தரகு வருமானமும் | **3,366** | 3,091 |
| நிகர வர்த்தக வருமானம் | **2,866** | 2,313 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர வருமானம் | **217** | 115 |
| இதர வருமானம் | **71** | 42 |
| **வட்டியில்லா வருமானம்** | **6,520** | 5,561 |
| **மொத்த வருமானம்** | **20,162** | 16,502 |
| ஊழியர் அனுகூலங்கள் | **5,053** | 4,376 |
| இதரச் செலவினங்கள் | **3,238** | 2,714 |
| **மொத்தச் செலவினங்கள்** | **8,291** | 7,090 |
| **கடன் தீர நிதி சேர்த்தல் மற்றும் ஒதுக்குகளுக்கு முன் வரும் லாபம்** | **11,871** | 9,412 |
| கண்கூடற்ற சொத்துக்களின் கடன் தீர நிதி சேர்த்தல் | **9** | – |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்கீடு | **590** | 237 |
| **கடன் தீர நிதி சேர்த்தல் மற்றும் ஒதுக்குகளுக்கு பின் வரும் லாபம்** | **11,272** | 9,175 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் லாபங்கள் அல்லது நட்டங்களின் பங்கு | **214** | 207 |
| **வரிக்கு முந்தைய லாபம்** | **11,486** | 9,382 |
| வருமான வரிச் செலவினம் | **1,423** | 1,188 |
| **நிகர லாபம்** | **10,063** | 8,194 |
| இவற்றுக்குரியவர்கள்: | | |
| **பங்குதாரர்கள்** | **10,062** | 8,193 |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதை | **1** | 1 |
| | **10,063** | 8,194 |
| சாதாரண பங்கு ஒன்றின் அடிப்படை மற்றும் ரொக்கமாக்கப்பட்ட வருமானம் ($) | **3.87** | 3.15 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

**டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்**

# தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
|---|---|---|
| **நிகர லாபம்** | **10,063** | 8,194 |
| **இதர விரிவான வருமானம்:** | | |
| **பிற்பாடு வருவாய் அறிக்கையில் மறுப்பகுப்பு செய்யப்படக்கூடிய இனங்கள்:** | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் நாணயமாற்று வேறுபாடுகள் | **(509)** | (954) |
| இணை நிறுவனங்களின் இதர விரிவான வருமானம் | **(1)** | 8 |
| மற்ற விரிவான வருமானம் மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளின் லாபங்கள்/ (நட்டங்கள்) | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீடு | **810** | (1,860) |
| வருமான அறிக்கைக்கு மாற்றியது | **(89)** | 117 |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பிலான வரிவிதிப்பு | **(55)** | 125 |
| பணப்புழக்க ஹெட்ஜ் இயக்கங்கள் | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீடு | **967** | (2,355) |
| வருமான அறிக்கைக்கு மாற்றியது | **237** | (140) |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பிலான வரிவிதிப்பு | **(84)** | 193 |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுப்பகுப்பு செய்யப்படமாட்டாத இனங்கள்:** | | |
| மற்ற விரிவான வருமானம் (வரியின் நிகரம்) மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட சமபங்கு கருவிகளின் நட்டங்கள் | **(181)** | (417) |
| நியாயமான மதிப்பிலான நிதிப் பொறுப்புகளின் சுயக் கடன் இடரிலிருந்து எழும் நியாய மதிப்பு மாற்றம் (வரியின் நிகரம்) | **(108)** | 115 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களின் மறுஅளவுகள் (வரியின் நிகரம்) | **(8)** | (1) |
| **இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | **979** | (5,169) |
| **மொத்த விரிவான வருமானம்** | **11,042** | 3,025 |
| இவற்றுக்குரியவர்கள்: | | |
| **பங்குதாரர்கள்** | **11,047** | 3,039 |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதை | **(5)** | (14) |
| | **11,042** | 3,025 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலை அறிக்கை

31 டிசம்பர் 2023 நிலவரப்படி

| $ மில்லியன்களில் | 2023 | 2022 |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் ரொக்கம், இருப்புகள் | **50,213** | 54,170 |
| அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | **70,565** | 64,995 |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **67,461** | 60,131 |
| சார்பியச் சொத்துகள் | **22,700** | 44,935 |
| வங்கியும் நிறுவனப் பங்குமுதலும் | **81,735** | 75,457 |
| வாடிக்கையாளர்களுக்குக் கடன்களும் முன்பணங்களும் | **416,163** | 414,519 |
| இதரச் சொத்துகள் | **17,975** | 18,303 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகள் | **2,487** | 2,280 |
| சொத்துகள், இதர நிலைச் சொத்துகள் | **3,689** | 3,238 |
| நன்மதிப்பு மற்றும் கண்கூடற்ற சொத்துக்கள் | **6,313** | 5,340 |
| **மொத்தச் சொத்துகள்** | **739,301** | 743,368 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **46,704** | 39,684 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய வைப்பும் இருப்பும் | **535,103** | 527,000 |
| சார்பியச் சொத்துகள் | **23,457** | 45,265 |
| இதரப் பொறுப்புகள் | **22,392** | 22,747 |
| இதரக் கடன் பத்திரங்கள் | **48,079** | 47,188 |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட பருவக் கடன்கள் | **1,319** | 4,412 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **677,054** | 686,296 |
| **நிகரச் சொத்துகள்** | **62,247** | 57,072 |
| **பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **11,604** | 11,495 |
| இதரப் பங்குமுதல் கருவிகள் | **2,392** | 2,392 |
| இதரக் காப்புநிதி | **(23)** | (1,347) |
| வருமானக் காப்புநிதி | **48,092** | 44,347 |
| **பங்குதாரர்களின் நிதிகள்** | **62,065** | 56,887 |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதை | **182** | 185 |
| **மொத்தப் பங்குமுதல்** | **62,247** | 57,072 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்ற அறிக்கை

31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| $ மில்லியன்களில் | நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு உரியவை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பங்கு மூலதனம் | இதரப் பங்குமுதல் கருவிகள் | இதரக் காப்புநிதி | வருமானக் காப்புநிதி | பங்குதாரர்களின் நிதிகள் | கட்டுப்பாடில்லாத பாத்தியதை | மொத்தப் பங்குமுதல் |
| **2023** | | | | | | | |
| ஜனவரி 1-இல் இருப்பு | **11,495** | **2,392** | **(1,347)** | **44,347** | **56,887** | **185** | **57,072** |
| கருவூலப் பங்குகளின் கொள்முதல் | **(20)** | **–** | **–** | **–** | **(20)** | **–** | **(20)** |
| செயலாக்கப் பங்குகள் வழங்கீட்டின் பேரில் காப்புநிதியிலிருந்து எடுத்தது. | **129** | **–** | **(132)** | **–** | **(3)** | **–** | **(3)** |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | **–** | **–** | **178** | **–** | **178** | **–** | **178** |
| பங்குதாரர்களுக்குச் செலுத்திய லாப ஈவு[(a)] | **–** | **–** | **–** | **(6,013)** | **(6,013)** | **–** | **(6,013)** |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதைகளுக்குச் செலுத்தப்பட்ட லாப ஈவு | **–** | **–** | **–** | **–** | **–** | **(7)** | **(7)** |
| துணை நிறுவனங்களின் கட்டுப்பாடுள்ள பாத்தியதை விற்பனை | **–** | **–** | **–** | **–** | **–** | **(2)** | **(2)** |
| மற்ற அசைவுகள் | **–** | **–** | **(61)** | **50** | **(11)** | **11** | **–** |
| நிகர லாபம் | **–** | **–** | **–** | **10,062** | **10,062** | **1** | **10,063** |
| இதர விரிவான வருமானம் | **–** | **–** | **1,339** | **(354)** | **985** | **(6)** | **979** |
| டிசம்பர் 31-இல் இருப்பு | **11,604** | **2,392** | **(23)** | **48,092** | **62,065** | **182** | **62,247** |
| **2022** | | | | | | | |
| ஜனவரி 1-இல் இருப்பு | 11,383 | 2,392 | 3,810 | 39,941 | 57,526 | 188 | 57,714 |
| கருவூலப் பங்குகளின் கொள்முதல் | (11) | – | – | – | (11) | – | (11) |
| செயலாக்கப் பங்குகள் வழங்கீட்டின் பேரில் காப்புநிதியிலிருந்து எடுத்தது. | 123 | – | (124) | – | (1) | – | (1) |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | – | – | 134 | – | 134 | – | 134 |
| பங்குதாரர்களுக்குச் செலுத்திய லாப ஈவு[(a)] | – | – | – | (3,789) | (3,789) | – | (3,789) |
| மற்ற அசைவுகள் | – | – | (36) | 25 | (11) | 11 | – |
| நிகர லாபம் | – | – | – | 8,193 | 8,193 | 1 | 8,194 |
| இதர விரிவான வருமானம் | – | – | (5,131) | (23) | (5,154) | (15) | (5,169) |
| டிசம்பர் 31-இல் இருப்பு | 11,495 | 2,392 | (1,347) | 44,347 | 56,887 | 185 | 57,072 |

(a) பங்குமுதலாகப் பகுக்கப்பட்ட மூலதனப் பங்குப் பத்திரங்களுக்குச் செலுத்தப்பட்ட பகிர்வுகள் உள்ளடங்கும் (2023: $84 மில்லியன், 2022: $85 மில்லியன்)

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

டிபிஎஸ் குரூப் ஹோல்டிங்ஸ் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்கள்

# தணிக்கை செய்யப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் புழக்க அறிக்கை

31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| $ மில்லியன்களில் | 2023 | 2022 |
|---|---|---|
| **நடைமுறைக் காரியங்களிலிருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| வரிக்கு முந்தைய லாபம் | **11,486** | 9,382 |
| **ரொக்கம் சாரா மற்றும் இதர இனங்களுக்கான சரிகட்டல்கள்:** | | |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்கீடு | **590** | 237 |
| கண்கூடற்ற சொத்துக்களின் கடன் தீர நிதி சேர்த்தல் | **9** | – |
| சொத்துகள் மற்றும் இதர நிலைச்சொத்துகளில் தேய்மானம் | **737** | 701 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் லாபங்கள் அல்லது நஷ்டங்களின் பங்கு | **(214)** | (207) |
| ஒரு துணை நிறுவனத்தின் கட்டுப்பாடுள்ள பாத்தியதை விற்பனையில் நிகர லாபம் | **(18)** | – |
| விற்பனையில் வந்த நிகர லாபம், சொத்துக்கள் மற்றும் இதர அசையா சொத்துக்களைத் தள்ளுபடி செய்தலின் நிகரம் | **19** | 50 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர வருமானம் | **(217)** | (115) |
| பங்கு அடிப்படையிலான கட்டணச் செலவு | **178** | 134 |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட தவணைக் கடன்களின் வட்டிச் செலவுகள் | **82** | 93 |
| குத்தகைப் பொறுப்புகளின் வட்டிச் செலவுகள் | **19** | 21 |
| நடைமுறைச் சொத்து, பொறுப்புகளில் மாற்றங்களுக்கு முன் லாபம் | **12,671** | 10,296 |
| **இவற்றில் அதிகரிப்பு/(குறைவு):** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **8,804** | 10,845 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய வைப்பும் இருப்பும் | **(6)** | 31,010 |
| வழிதோன்றல்களும் மற்ற பொறுப்புகளும் | **(19,362)** | 28,616 |
| இதரக் கடன் பத்திரங்களும் கைமாற்றுகளும் | **1,150** | (4,727) |
| **இவற்றில் (அதிகரிப்பு)/குறைவு:** | | |
| மத்திய வங்கிகளில் உள்ள கட்டுப்பாடு கொண்ட இருப்புகள் | **(223)** | (705) |
| அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | **(6,180)** | (13,801) |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **(8,152)** | (9,328) |
| வங்கியும் நிறுவனப் பங்குமுதலும் | **(6,926)** | (7,878) |
| வாடிக்கையாளர்களுக்குக் கடன்களும் முன்பணங்களும் | **2,156** | (12,410) |
| வழித்தோன்றல்களும் மற்ற சொத்துக்களும் | **22,553** | (28,108) |
| செலுத்தப்பட்ட வரி | **(1,319)** | (1,041) |
| **நடைமுறைக் காரியங்களால் கிடைத்த நிகர ரொக்கம் (1)** | **5,166** | 2,769 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| இணை நிறுவனங்களிலிருந்து லாப ஈவு | **81** | 86 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகளிலிருந்து வட்டி கையகப்படுத்துதல் | **(124)** | (114) |
| சொத்துகள் மற்றும் இதர நிலைச்சொத்துகளின் விற்பனை வருமானம் | **2** | 3 |
| சொத்துகள் மற்றும் இதர நிலைச்சொத்துகளின் கொள்முதல் | **(718)** | (669) |
| துணை நிறுவனத்தின் விலக்குதலிருந்து வரும் வருமானம் | **49** | – |
| சிட்டி தாய்வான் நுகர்வோர் வங்கி வணிகத்தை கையகப்படுத்தியதால் வரும் நிகர ரொக்க வருமானம் | **1,437** | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் கிடைத்த/ (பயன்படுத்தப்பட்ட) நிகர ரொக்கம் (2)** | **727** | (694) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து ரொக்கப் புழக்கம்** | | |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட பருவக் கடன்கள் மீட்பு | **(3,057)** | – |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட தவணைக் கடன்கள் வெளியீடு | **(92)** | (86) |
| கருவூலப் பங்குகளின் கொள்முதல் | **(20)** | (11) |
| நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட லாப ஈவு[(a)] | **(6,013)** | (3,789) |
| கட்டுப்பாடில்லாத பாத்தியதைகளுக்குச் செலுத்தப்பட்ட லாப ஈவு | **(7)** | – |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய நிகர ரொக்கம்(3)** | **(9,189)** | (3,886) |
| பரிவர்த்தனை மாற்றுச் சரிகட்டல்கள்(4) | **(805)** | (903) |
| **ரொக்கம், ரொக்கத்துக்கிணையானவைகளில் நிகர மாற்றம் (1)+(2)+(3)+(4)** | **(4,101)** | (2,714) |
| **1 ஜனவரி-இல் ரொக்கம் மற்றும் ரொக்கத்துக்கிணையானவை** | **43,976** | 46,690 |
| **31 டிசம்பர்-இல் ரொக்கம் மற்றும் ரொக்கத்துக்கிணையானவை** | **39,875** | 43,976 |

*(a) பங்குமுதலாகப் பகுக்கப்பட்ட மூலதனப் பங்குப் பத்திரங்களுக்குச் செலுத்தப்பட்ட பகிர்வுகள் உள்ளடங்கும்*

***குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.***

## இதர விவரங்கள்

### 1. மூலதன வளம்

| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
|---|---|---|
| பொதுப் பங்குமுதல் ஒற்றைப் படி மூலதனம் | **53,789** | 50,487 |
| ஒற்றைப் படி மூலதனம் | **56,182** | 52,880 |
| மொத்த மூலதனம் | **59,306** | 59,045 |
| இடர்கோள் மதிப்பிடப்பட்ட சொத்துகள் | **368,363** | 346,895 |
| **மூலதன வள விகிதங்கள்[(a)] (%)** | | |
| பொதுவான சமபங்கு அடுக்கு 1 (சிஈடி-1) | **14.6** | 14.6 |
| படி 1 | **15.3** | 15.2 |
| மொத்தம் | **16.1** | 17.0 |

*(a) இந்தத் தொகுதியின் மூலதன போதுமான விகிதங்கள் வெளிப்புற வரையறுக்கப்பட்ட உத்தரவாத மதிப்பாய்வுக்கு உட்பட்டிருப்பதால், எம்ஏஎஸ் அறிவிப்பு எஃப்ஹெச்சி-எண்609-க்கு இணங்க "தணிக்கையாளரின் அறிக்கை மற்றும் கூடுதலான தகவல் வருடாந்தர கணக்கோடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்"*

### 2. லாப ஈவுகள்

டிசம்பர் 31, 2023-ல் முடிவடைந்த நிதி ஆண்டுக்காக, DBSH சாதாரணப் பங்குகள் ஒவ்வொன்றுக்கும் வரிவிலக்கு பெற்ற இறுதி ஒற்றைப்படி லாப ஈவு 54 காசுகள் என இயக்குநர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள், இது மார்ச் 28, 2024-ல் நடைபெறும் வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் பங்குதாரர்களின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு இருக்கும்.

முன்மொழியப்பட்ட லாப ஈவுத்தொகைகளின் விவரங்கள், நிதியாண்டின் போது செலுத்தப்பட்ட இடைக்கால லாப ஈவுத் தொகைகள் பின்வருமாறு:

| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
|---|---|---|
| **DBSH சாதாரணப் பங்குகள்** | | |
| இடைக்கால ஒரு படி வரி விலக்கு ஈவுத்தொகையான $1.38 (2022: $1.08) | **3,557** | 2,778 |
| முடிவான ஒரு படி வரி விலக்கு ஈவுத்தொகையான $0.54 (2022: $0.42) | **1,393** | 1,083 |
| விசேஷ ஈவுத்தொகையான $0.50 | **–** | 1,289 |
| | **4,950** | 5,150 |

### 3. முன்மொழியப்பட்ட ஊக்கத் தொகை வெளியீடு

தற்போதுள்ள 10 DBSH சாதாரணப் பங்குகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஊக்கத் தொகை பங்கு என்ற அடிப்படையில் ஒரு ஊக்கத் தொகை வெளியீட்டை வாரியம் முன்மொழிந்துள்ளது. டிசம்பர் 31, 2024-ல் முடிவடையும் நிதி ஆண்டில், ஊக்கத் தொகை பங்குகள் முதல் இடைக்கால ஈவுத்தொகையிலிருந்து ஈவுத்தொகை கொடுப்பனவுகளுக்குத் தகுதி பெறும்.

டிபிஎஸ் பேங்க் லிமிடெட்.

# தணிக்கை செய்யப்பட்ட வருவாய் அறிக்கை

31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

| | வங்கி | |
|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
| வட்டி வருமானம் | **22,231** | 11,984 |
| வட்டிச் செலவினம் | **12,350** | 4,092 |
| **நிகர வட்டி வருமானம்** | **9,881** | 7,892 |
| நிகரக் கட்டணமும் தரகு வருமானமும் | **2,365** | 2,166 |
| நிகர வர்த்தக வருமானம் | **2,450** | 1,964 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் மூலம் நிகர வருமானம் | **174** | 96 |
| இதர வருமானம் | **1,068** | 331 |
| **வட்டியில்லா வருமானம்** | **6,057** | 4,557 |
| **மொத்த வருமானம்** | **15,938** | 12,449 |
| ஊழியர் அனுகூலங்கள் | **3,153** | 2,675 |
| இதரச் செலவினங்கள் | **2,146** | 1,764 |
| **மொத்தச் செலவினங்கள்** | **5,299** | 4,439 |
| **ஒதுக்குகளுக்கு முன் லாபம்** | **10,639** | 8,010 |
| கடன் மற்றும் இதர இழப்புகளுக்கான ஒதுக்கீடு | **379** | 92 |
| **வரிக்கு முந்தைய லாபம்** | **10,260** | 7,918 |
| வருமான வரிச் செலவினம் | **1,057** | 878 |
| **பங்குதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட நிகர லாபம்** | **9,203** | 7,040 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

**டிபிஎஸ் பேங்க் லிமிடெட்.**

# தணிக்கை செய்யப்பட்ட விரிவான வருவாய் அறிக்கை

**31 டிசம்பர் 2023-இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | வங்கி | |
|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
| **நிகர லாபம்** | **9,203** | 7,040 |
| **இதர விரிவான வருமானம்:** | | |
| **பிற்பாடு வருவாய் அறிக்கையில் மறுப்பகுப்பு செய்யப்படக்கூடிய இனங்கள்:** | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளின் நாணயமாற்று வேறுபாடுகள் | **(179)** | (216) |
| மற்ற விரிவான வருமானம் மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட கடன் கருவிகளின் லாபங்கள்/ (நட்டங்கள்) | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீடு | **652** | (1,530) |
| வருமான அறிக்கைக்கு மாற்றியது | **(66)** | 117 |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பிலான வரிவிதிப்பு | **(34)** | 77 |
| பணப்புழக்க ஹெட்ஜ் இயக்கங்கள் | | |
| பங்குமுதலில் சேர்ந்த நிகர மதிப்பீடு | **775** | (1,703) |
| வருமான அறிக்கைக்கு மாற்றியது | **202** | (100) |
| இதர விரிவான வருமானத்தின் உட்கூறுகள் தொடர்பிலான வரிவிதிப்பு | **(46)** | 80 |
| **பிற்பாடு வருமான அறிக்கையில் மறுப்பகுப்பு செய்யப்படமாட்டாத இனங்கள்:** | | |
| மற்ற விரிவான வருமானம் (வரியின் நிகரம்) மூலமாக நியாய விலையில் வகைப்படுத்தப்பட்ட சமபங்கு கருவிகளின் நட்டங்கள் | **(180)** | (422) |
| நியாயமான மதிப்பிலான நிதிப் பொறுப்புகளின் சுயக் கடன் இடரிலிருந்து எழும் நியாய மதிப்பு மாற்றம் (வரியின் நிகரம்) | **(108)** | 115 |
| வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களின் மறுஅளவுகள் (வரியின் நிகரம்) | **(3)** | – |
| **இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்** | **1,013** | (3,582) |
| **பங்குதாரர்களுக்குப் பாத்தியப்பட்ட மொத்த விரிவான வருமானம்** | **10,216** | 3,458 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

**டிபிஎஸ் பேங்க் லிமிடெட்.**

# தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கை

**31 டிசம்பர் 2023 நிலவரப்படி**

| | வங்கி | |
|---|---|---|
| **$ மில்லியன்களில்** | **2023** | **2022** |
| **சொத்துகள்** | | |
| மத்திய வங்கிகளில் ரொக்கம், இருப்புகள் | **42,488** | 45,751 |
| அரசாங்கப் பங்குப் பத்திரங்களும் கருவூல உண்டியல்களும் | **48,083** | 44,946 |
| வங்கிகளிலிருந்து வர வேண்டியவை | **61,237** | 53,653 |
| சார்பியச் சொத்துகள் | **21,446** | 43,517 |
| வங்கியும் நிறுவனப் பங்குமுதலும் | **71,402** | 66,063 |
| வாடிக்கையாளர்களுக்குக் கடன்களும் முன்பணங்களும் | **321,902** | 326,983 |
| இதரச் சொத்துகள் | **12,163** | 13,917 |
| கூட்டாளிகள் மற்றும் கூட்டு முயற்சிகள் | **1,484** | 1,386 |
| துணை நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டவை | **15,594** | 13,065 |
| துணை நிறுவனங்களிலிருந்து வரவேண்டியவை | **29,309** | 22,758 |
| ஹோல்டிங் நிறுவனங்களிடமிருந்து வரவேண்டியவை | **1,474** | 1,119 |
| சொத்துகள், இதர நிலைச் சொத்துகள் | **1,978** | 1,897 |
| நன்மதிப்பு மற்றும் கண்கூடற்ற சொத்துக்கள் | **334** | 334 |
| **மொத்தச் சொத்துகள்** | **628,894** | 635,389 |
| **பொறுப்புகள்** | | |
| வங்கிகளுக்குச் சேர வேண்டியவை | **41,357** | 32,812 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய வைப்பும் இருப்பும் | **401,460** | 408,290 |
| சார்பியச் சொத்துகள் | **21,728** | 43,286 |
| இதரப் பொறுப்புகள் | **15,711** | 16,668 |
| இதரக் கடன் பத்திரங்கள் | **40,992** | 40,918 |
| ஹோல்டிங் நிறுவனத்துக்குச் சேரவேண்டியவை | **5,037** | 7,276 |
| துணை நிறுவனங்களுக்குச் சேர வேண்டியவை | **47,621** | 36,354 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **573,906** | 585,604 |
| **நிகரச் சொத்துகள்** | **54,988** | 49,785 |
| **பங்குமுதல்** | | |
| பங்கு மூலதனம் | **24,452** | 24,452 |
| இதரப் பங்குமுதல் கருவிகள் | **2,396** | 2,396 |
| இதரக் காப்புநிதி | **(2,610)** | (3,980) |
| வருமானக் காப்புநிதி | **30,750** | 26,917 |
| **பங்குதாரர்களின் நிதிகள்** | **54,988** | 49,785 |

*குறிப்புகள் இந்த நிதிநிலை அறிக்கைகளின் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன.*

## இதர விவரங்கள்

### 1. டிபிஎஸ் பேங்க் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனங்களின் (வங்கி குழுமம்) மூலதன வளங்கள்

| | வங்கி குழுமம் | |
|---|---|---|
| **மூலதன வள விகிதங்கள்[a] (%)** | **2023** | **2022** |
| பொதுவான சமபங்கு அடுக்கு 1 (சிஈடி-1) | **14.7** | 14.4 |
| படி 1 | **15.3** | 15.1 |
| மொத்தம் | **16.2** | 17.0 |

*(a) வங்கிக் குழுமத்தின் மூலதன வள விகிதங்கள் வரையறுக்கப்பட்ட வெளிப்புற உத்தரவாத மதிப்பாய்வுக்கு உட்பட்டுள்ளன, இது "தணிக்கையாளரின் அறிக்கை மற்றும் வருடாந்திர கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கூடுதல் தகவல்கள்" என்ற MAS அறிவிப்பு 609-க்கு இணங்க உள்ளது.*